(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு

**நான்காம் தவணைப் பரீட்சை - 2024**

# National Field Work Centre, Thondaimanaru.

FWC

**4th Term Examination - 2024**

| | | | | |
|---|---|---|---|---|
| புவியியல் - I<br>Geography - I | Three Hours 10 Min<br>Gr : 13 (2024) | 22 | T | I |

**மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்**

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும், விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

## அறிவுறுத்தல்கள்:

- இவ்வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டது.
- பகுதி I, 40 பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது. பகுதி I இற்கான விடைகள் இத்தாளிலேயே எழுதப்பட வேண்டும்
- பகுதி I இல் ஒவ்வொரு சரியான விடைக்கும் ஒரு புள்ளி வீதம் உரித்தாகும்.
- பகுதி II இல் உள்ள இரண்டு வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- பகுதி III இல் நான்கு வினாக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் இரண்டு வினாக்களைத் தெரிவு செய்து விடையளித்தல் வேண்டும்.
- பகுதி I, பகுதி II, பகுதி III ஆகியவற்றிற்குரிய விடைத்தாள்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு கையளிக்கப் பட வேண்டும்.

## பகுதி - I

1. இடவிளக்கப் படங்களின் விசேட பண்பு
   (1) ஓர் அளவுத்திட்டத்திற்கு ஏற்ப வரையப்படுவதாகும்
   (2) நிறங்கள், குறியீடுகள் பயன்படுத்தி வரையப்படுவதாகும்
   (3) பௌதிக, பண்பாட்டு அம்சங்களை உள்ளடக்கியிருப்பதாகும்
   (4) பௌதிக, பண்பாட்டு அம்சங்களுக்கு இடையிலான இடைத்தொடர்பினை எடுத்துக் காட்டுவதாகும்.
   (5) ஒரு பிரதேசத்தின் பௌதிக அம்சங்களின் இடம்சார்ந்த பரம்பலை இலகுவாக விளக்குவதாகும். (..........)

2. இலங்கையின் 1 : 50,000 இடவிளக்கப் படங்களில் சமவுயரக் கோடுகளின் இடைவெளி
   (1) 100 $m$ (2) 80 $m$ (3) 75 $m$ (4) 50 $m$ (5) 20 $m$ (..........)

3. பூகோள இடைநிலைப்படுத்தல் முறைமையின் ($GPS$) அடிப்படைப் பிரிவுகளின் எண்ணிக்கை யாது?
   (1) 3 (2) 5 (3) 7 (4) 9 (5) 11 (..........)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

4. சிறுவர் சனத்தொகையில் ஏற்பட்டுவரும் வீழ்ச்சி, வயது முதிர்ந்தோர் சனத்தொகையில் ஏற்படும் அதிகரிப்பு போன்ற பிரச்சினைகளை விளங்கி அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதற்கு உதவுகின்ற வரைபு எது?
   (1) இரட்டைபார் வரைபு (2) பல்பார் வரைபு (3) கூம்பகபார் வரைபு
   (4) சமகணியப்படங்கள் (5) இடக்கணியப் படங்கள் (..........)

5. தொலையுணர்வு தொழில்நுட்ப முறையில் செய்மதிகள் மூலம் சேகரிக்கப்படும் தகவல்கள் தரைக்கட்டுப்பாட்டு நிலையத்திற்கு அனுப்பப்படும் முறை
   (1) காவித் தரவாக (2) எண்ணிலக்க தரவுகளாக (3) குறியீடுகளாக
   (4) நிறங்களாக (5) ஒளிப்படங்களாக (..........)

6. புவியியல் தகவல் முறையில் $(GIS)$ தரவுகள் களஞ்சியப்படுத்தும் வடிவங்களின் எண்ணிக்கை
   (1) 2 (2) 4 (3) 6 (4) 8 (5) 10 (..........)

7. இலங்கையின் $1:50,000$ இடவிளக்கப்படத்தில் எடுத்துக் காட்டப்பட்டுள்ள ஒரு அம்சத்துடன் சரியான பொருத்தத்தைக் கொண்ட நிறம் மற்றும் குறியீட்டினைக் காட்டுகின்ற விடை எது?
   (1) புல்நிலம் - நீலம்
   (2) உள்ளூராட்சி எல்லை - கறுப்பு முறிகோடு
   (3) சிறுவீதி - சிவப்பு
   (4) நெல் - பச்சை
   (5) வீட்டுத்தோட்டம் - கபிலம் (..........)

8. பூகோள இடநிலைப்படுத்தல் முறைமை $(GPS)$ இன் விண்வெளிப் பிரிவில் நிறுத்தப்பட்டுள்ள செய்மதிகளின் வேகத்தினையும், அவற்றின் அச்சில் அவை நாளொன்றிற்குப் பயணிக்கின்ற தடவைகளையும் தரும் விடையைத் தெரிவு செய்க.
   (1) $10,000-2$ (2) $11,000-2$ (3) $12,500-4$ (4) $12,000-3$ (5) $10,500-1$

9. இலங்கையின் நெல் விளைநிலங்களின் அளவில் மாவட்ட ரீதியாக ஏற்பட்ட மாற்றங்களை எடுத்துக் காட்டுவதற்கு மிகப் பொருத்தமாகப் பயன்படும் படங்கள்
   (1) கோட்டு வரைபுகள் (2) இடக்கணியப் படங்கள் (3) வட்டவரைபு
   (4) சமகணியப் படங்கள் (5) கருப்பொருள் படங்கள் (..........)

10. நபர் ஒருவர் செல்ல வேண்டிய இடத்தினைத் துல்லியமாக அறிந்து கொள்வதற்கு உதவுகின்ற நவீன படவரைகலை நுட்ப முறை
   (1) விமான ஒளிப்பட நுட்பமுறைமை
   (2) செய்மதி தொழில் நுட்ப முறைமை
   (3) பூகோள இடநிலைப்படுத்தல் முறைமை
   (4) புவியியல் தகவல் முறைமை
   (5) தொலையுணர்வு தொழில்நுட்ப முறைமை (..........)

11. “புவி மேற்பரப்பின் பரப்பு ரீதியான வேறுபாடுகளைக் கற்றல் புவியியல்” என்ற வரைவிலக்கணத்தினை முன்வைத்த புவியியலாளர்
   (1) ரிச்சட்ஹாட்சோன் (2) கால்ரிட்டர் (3) வொன்கம்போல்ட்
   (4) குளோடியஸ் தொலமி (5) எரஸ்தோனிஸ் (..........)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

12. கடல் மட்டத்தில் இருந்து ஒவ்வொரு 1000 மீற்றருக்கும் 6.4 ℃ வெப்பநிலை வீழ்ச்சியடைதல்.
(1) நிரம்பாத வளி (2) சம அமுக்கம்
(3) நிரம்பிய வளி (4) காற்றமுத்த தாழ்வு மண்டலம்
(5) வெப்ப நழுவு வீதம் (..........)

13. உயிர்கோளம் நிலைத்திருப்பதற்குப் படை மண்டலம் வழங்குகின்ற பங்களிப்பு
(1) உயரத்திற்கு ஏற்ப வெப்பநிலை அதிகரிப்பது
(2) புற ஊதாக் கதிர்களை உறுஞ்சுவது
(3) கடல் மட்டத்திலிருந்து 50 $km$ வரை பரந்திருப்பது
(4) வெப்பநிலை படிப்படியாக வீழ்ச்சியடைவது
(5) விலங்கினம், தாவரங்களின் பல்வகைமை (..........)

14. இரும்பு ($Fe$) மக்னீசியம் ($Mg$) ஆகிய கனியங்களை அதிகமாகக் கொண்டு காரத்தன்மையான பாறைகளாகக் காணப்படுபவை
(1) கப்ரோ, தொலமைட்
(2) கருங்கல், தயோரைட்
(3) ஒட்சிடியன், உப்புமூலப் பாறை
(4) அன்டிசைற், பெரிடோடசிட் பாறை
(5) சலவைகல், படிகப்பார் (..........)

15. இடைவெப்பக் காலநிலைப் பிரதேசங்களில் மண் உருவாக்கத்தினைத் துரிதப்படுத்துகின்ற காரணி
(1) தரைத்தோற்றம் (2) காலநிலை (3) நுண்ணுயிர்த் தொழிற்பாடு
(4) தாய்ப்பாறை (5) காலம் (..........)

16. இலங்கையில் சிலாபத்தின் வடக்கே தப்போவ, ஆண்டிகம, பள்ளம ஆகிய பிரதேசங்களில் பரந்துள்ள பாறை வகை
(1) சிலிக்கேற் (2) குவாட்சைட் (3) கொண்டலைற் பாறை
(4) யுராசிக் பாறை (5) சாணோகைற் பாறை (..........)

17. விசூவியஸ் எரிமலை அமைந்துள்ள நாடு
(1) ஐஸ்லாந்து (2) இத்தாலி (3) ஜப்பான்
(4) பிலிப்பைன்ஸ் (5) இந்தோனேசியா (..........)

18. ஆற்று வடிநிலமொன்றின் இளமை நிலையில் காணப்படும் நிலவுருவங்கள்
(1) வெள்ளச் சமவெளி, கழிமுகம், பனியெருத்தேரி
(2) நீர்வீழ்ச்சி, அகன்ற U வடிவ பள்ளத்தாக்கு, விரைவோட்ட ஆற்றுத் தொகுதி
(3) ஒடுங்கிய பள்ளத்தாக்கு, ஆற்றுச்சிறை, நீர்வீழ்ச்சி
(4) மியாந்தர், பொங்குமுகம், ஆற்றுத்தீவு
(5) பின்னிய ஆறு, கழிமுகம், வெள்ளச் சமவெளி (..........)

19. பாலைவனப் பிரதேசத்தில் நீரின் செயற்பாட்டினால் உருவாகும் படிதல் நிலவுருவம்
(1) வாடிகள் (2) பொங்குமுகம் (3) பிறைவடிவ மணற் குன்று
(4) நட்சத்திரக் குன்று (5) யடாங்கு (..........)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

20. நிலச் சரிவினைத் துரிதப்படுத்துகின்ற மானிடக் காரணிகளில் ஒன்று
   (1) நிலத்தின் சாய்வுத் தன்மை
   (2) உயரமான பிரதேசங்களில் நீரினைத் தேக்கி வைத்தல்
   (3) தாய்ப்பாறை சிதைவடைதல்
   (4) தரையின் கட்டமைப்பு
   (5) மழைவீழ்ச்சியின் செறிவு (..........)

21. மத்தியகோட்டு வலயத்திலும், தாழ் அகலக்கோட்டுப் பிரதேசத்திலும் பிரதான படிவு வீழ்ச்சி
   (1) பனிப்பொழிவு (2) மூடுபனி (3) பனித்துளிகள்
   (4) ஆலங்கட்டிமழை (5) மழை (..........)

22. காற்றுப்பக்கம் என்பது
   (1) மலைத்தொடரின் மழைவீழ்ச்சியைப் பெறுகின்ற பிரதேசம்
   (2) மலைத்தொடரின் மழைவீழ்ச்சியைப் பெறுகின்ற பிரதேசத்திற்கு எதிராகவுள்ள பிரதேசம்
   (3) ஆலங்கட்டி மழைப்பொழிவு இடம்பெறுகின்ற பிரதேசம்
   (4) அயன வலயத்தின் தரைப் பகுதியை அண்மித்த பிரதேசம்
   (5) கூடிய, குறைந்த அமுக்க வேறுபாடு உள்ள பிரதேசம் (..........)

23. கெப்பனின் காலநிலைப் பாகுபாட்டிற்கு அடிப்படையாக அமைந்த நியதிகள்
   (1) வருடாந்த ஆவியாக்க, ஆவியுயிர்ப்பு
   (2) நீர்ப்பற்றாக்குறை, ஈரப்பதன்
   (3) படிவு வீழ்ச்சி, முகில்களின் பரம்பல்
   (4) தாவரப் போர்வை, மழைவீழ்ச்சி
   (5) குறித்த பிரதேசத்தின் வெப்பநிலை, மழைவீழ்ச்சி (..........)

24. இலங்கையில் தென்மேற்பருவக்காற்று வீசும் காலங்களில் ஏற்படக் கூடிய அனர்த்தங்கள்
   (1) வெள்ளப்பெருக்கு, மண்சரிவு
   (2) வரட்சி, சூறாவளி
   (3) வெள்ளப்பெருக்கு, வரட்சி
   (4) எல்நினோ, லாநினோ
   (5) பனிக்கட்டி வீழ்வு, வரட்சி (..........)

25. இலங்கையில் அதிகூடிய மழைவீழ்ச்சி கிடைக்கும் பிரதேசம்
   (1) வட்டவளை (2) யட்டியாந்தோட்ட (3) மாலிபொட
   (4) கந்தானை (5) கந்தப்பொல (..........)

26. "சுருங்கிய வயதுக் கூம்பகம்" ஒன்றின் பிரதான அம்சங்கள் மூன்றினைத் தரும் விடை
   (1) உயர்ந்த ஆயுள் எதிர்பார்ப்புக் காலம், குறைந்த பிறப்பு வீதம், குறைந்த இறப்பு வீதம்
   (2) குறைந்த ஆயுள் எதிர்பார்ப்புக் காலம், அதிகரித்த பிறப்பு வீதம், குறைந்த இறப்பு வீதம்
   (3) உயர்ந்த ஆயுள் எதிர்பார்ப்புக் காலம், அதிகரித்த பிறப்பு வீதம், அதிகரித்த இறப்பு வீதம்
   (4) உயர்ந்த பிறப்பு வீதம், நடுத்தர வயதுப் பிரிவின் அதிகரிப்பு, ஆயுள் எதிர்பார்ப்பு அதிகரிப்பு
   (5) உயர்ந்த ஆயுள் எதிர்பார்ப்பு, குறைந்த பிறப்பு வீதம், அதிகரித்த இறப்பு வீதம் (..........)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

27. பருமட்டான பிறப்பு விகிதத்திலிருந்து பருமட்டான இறப்பு விகிதத்தினைக் கழிப்பதன் மூலம் கணிப்பீடு செய்யப்படுவது
(1) நாடொன்றின் சனத்தொகை
(2) நாடொன்றின் சனத்தொகை அடர்த்தி
(3) இயற்கை அதிகரிப்பு
(4) சனத்தொகையில் உள்ள முதியோர் தொகை
(5) சனத்தொகையில் உள்ள தங்கி வாழ்வோர் தொகை (..........)

28. "புவி மேற்பரப்பில் மனிதனால் உருவாக்கப்பட்ட வாழிடம் குடியிருப்பாகும்" என்ற வரைவிலக்கணத்தினை முன் வைத்தவர்.
(1) கார்ல் ரிட்டர்
(2) அலெக்சாண்டர் வொன் ஹம்போல்ட்
(3) குளோடியஸ் தொலமி
(4) டிக்கன்சன்
(5) விளாடிமிர்புடின் (..........)

29. உலகில் நாகரிகமான குடியிருப்புக்கள் தோற்றம் பெற்றது
(1) கற்காலத்தில்
(2) விவசாய யுகத்தில்
(3) இடையர் யுகத்தில்
(4) இரும்பு யுகத்தில்
(5) கைத்தொழிற்புரட்சியின் பின் (..........)

30. நவீன கிராமங்கள், கிராமிய நிலையங்கள், பிரதேச நிலையங்கள், சிறிய நகரங்கள் என்ற படிமுறையில் இலங்கையில் அமைக்கப்பட்ட குடியிருப்பு
(1) பெருந்தோட்டக் குடியிருப்புக்கள்
(2) மகாவலிக் குடியிருப்புக்கள்
(3) கரையோர குடியிருப்புக்கள்
(4) ஈரவலய கிராமக் குடியிருப்புக்கள்
(5) உலர்வலய குளக் கிராமங்கள் (..........)

31. இலங்கையின் அத்துகிரிய, பெனிதெனிய, கராபிட்டிய, நிட்டம்புவ போன்றன
(1) சேவை மையங்கள் (2) கல்வி நகரங்கள் (3) நகரங்கள்
(4) கிராமங்கள் (5) கிராம நகரங்கள் (..........)

32. கிராமப் பகுதிகளின் தள்ளுவிசைக் காரணிகள்
(1) உட்கட்டமைப்பு வசதி, உயர்ந்த வாழ்க்கைத் தரம்
(2) வறுமை, வேலையின்மை
(3) அரசியல் பாதுகாப்பு இன்மை, சுதந்திரம்
(4) உயர்ந்த நகராக்கம், சூழல் இடர்கள்
(5) உட்கட்டமைப்பு வசதி, பொழுதுபோக்கு வசதிகள் (..........)

33. தென்அமெரிக்கக் கண்டத்தில் அதிக உயர் நகராக்கம் கொண்ட நாடு
(1) பிறேசில் (2) ஆஜென்ரீனா (3) சிலி
(4) உருகுவே (5) வெனசுவெலா (..........)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

34. ஆசியாவின் மிகப் பெரிய சேரிக் குடியிருப்பு
(1) கிபிரா (2) ஓராங்கி (3) தாராவி
(4) மொகாடிசு (5) கின்மின் குற்சு (..........)

35. இலங்கையில் குறைவான நகரமயமாக்க மட்டத்தினைக் கொண்டுள்ள இரண்டு மாவட்டங்கள்
(1) குருநாகல், கேகாலை (2) மன்னார், வவுனியா (3) மொனராகலை, பதுளை
(4) கண்டி, நுவரெலியா (5) அம்பாறை, மட்டக்களப்பு (..........)

36. நகரமயமாக்கத்தில் அதிக செல்வாக்குச் செலுத்தும் காரணி
(1) நகர சனத்தொகையின் இயற்கை வளர்ச்சி
(2) நிர்வாக எல்லைகள் மாற்றமடைதல்
(3) கிராம - நகர மக்களின் இடப்பெயர்வு
(4) உள்கட்டமைப்பு வசதிகளின் விருத்தி
(5) தொழில்நுட்ப அறிவு (..........)

37. ஆசியா, ஆபிரிக்கக் கண்டங்களிலிருந்து இடம்பெயர்வோரில் அதிகமானவர்கள் சென்றடைகின்ற பிரதேசம்
(1) தென்னாசியா (2) மத்திய கிழக்கு (3) தூரகிழக்கு ஆசியா
(4) ஐரோப்பா (5) தென்கிழக்கு ஆசியா (..........)

38. திட்டமிடப்பட்ட கொத்தணிக் குடியிருப்பில் காணப்படும் பண்பு யாது?
(1) மத்தியமயப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் அதிகமாகக் காணப்படும்.
(2) இடைத்தொடர்புகள் குறைவாகக் காணப்படும்.
(3) குடியிருப்புக்கள் வீதிகளின் ஓரங்களில் அமைந்திருக்கும்
(4) நெல்வயல்கள், வீட்டுத்தோட்டங்கள் ஒன்றாக அமைந்திருக்கும்
(5) கட்டடங்கள் ஐதாகக் காணப்படும் (..........)

39. உலகில் நூறு சதவீத நகராக்கத்தினைக் கொண்ட நாடு எது?
(1) இந்தியா (2) பிரித்தானியா (3) சிங்கப்பூர்
(4) ஜப்பான் (5) ஐக்கிய அமெரிக்கா (..........)

40. இலங்கையின் குடித்தொகையில் வயது முதிர்ந்தோர் தொகையின் அதிகரிப்பில் ஏற்பட்ட மாற்றத்திற்கான காரணங்களில் ஒன்று
(1) மக்களின் இடப்பெயர்வு
(2) சிசுமரண வீதக்குறைவு
(3) தகவல் தொடர்பாடல் சாதனங்களின் வளர்ச்சி
(4) நவீன சுகாதார மருத்துவ வசதி
(5) உட்கட்டுமான விருத்தி (..........)

(40 புள்ளிகள்)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

## பகுதி - II

### அறிவுறுத்தல்கள்

- ❖ பகுதி II இல் உள்ள இரண்டு வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- ❖ பகுதி III இல் நான்கு வினாக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் இரண்டு வினாக்களைத் தெரிவு செய்து விடையளித்தல் வேண்டும்.
- ❖ இவ் வினாத்தாளுக்கு விடையளிப்பதற்காக இலங்கையின் 1 : 50 000 அளவுத்திட்டத்தில் அமைந்த இடவிளக்கப்படத்தின் ஒரு பகுதியும், உலகப்புறவுருவப் படமும் வழங்கப்படும்.

### குறிப்பு

- ❖ விடைத்தாளில் தொடர்புடைய வினா இலக்கத்தினையும் அதன் உபபிரிவு இலக்கத்தினையும் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.
- ❖ இடவிளக்கப்படத்தின் மேல் விடைகள் எழுதப்படக்கூடாது.
- ❖ உமது விடைத்தாளுடன் தரப்பட்டுள்ள இடவிளக்கப்படத்தினை இணைக்க வேண்டாம்.

- இலங்கை நில அளவைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 1 : 50 000 அளவுத்திட்டத்தில் அமைந்த இரத்தினபுரி இடவிளக்கப்படத்தின் ஒரு பகுதி உமக்குத் தரப்பட்டுள்ளது. அதில் சமவுயரக் கோடுகளின் இடைவெளி 20 மீற்றரினால் காட்டப்பட்டுள்ளது. அப்படத்தினைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. (i) படத்தில் காட்டப்பட்டுள்ள நிர்வாக எல்லைகள் இரண்டினைப் பெயரிடுக. *(01 புள்ளி)*

   (ii) சதுரம் *P* இல் காணப்படும் நான்கு வீதிகளைப் பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

   (iii) சதுரம் *A* யை 1 : 25,000 என்ற அளவுத்திட்டத்தில் வரைக. *(02 புள்ளிகள்)*

   (iv) படப்பிரதேசத்தில் செய்கை பண்ணப்படுகின்ற பயிர்கள் ஆறினைத் (06) தருக. *(03 புள்ளிகள்)*

   (v) (a) படப்பகுதியின் குடியிருப்புப் பரம்பல் பாங்கினை இரண்டு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. *(04 புள்ளிகள்)*

   (b) படப் பிரதேசத்தின் குடியிருப்புப் பரம்பலை வரையறுத்துள்ள மூன்று காரணிகளைக் குறிப்பிடுக. *(03 புள்ளிகள்)*

   (vi) படப் பிரதேசத்தின் தரைத்தோற்றத்திற்கும் நிலப் பயன்பாட்டிற்கும் இடையில் காணப்படும் இடைத்தொடர்பினை இரண்டு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. *(05 புள்ளிகள்)*

2. தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப் படத்தில் வழமையான குறியீடுகளையும், நிறங்களையும் பயன்படுத்திப் பின்வருவனவற்றைக் குறித்துப் பெயரிடுக.

   (i) கீல்கால்வாய்

   (ii) மகரக்கோடு

   (iii) ஓறினாகோ நதி

   (iv) கனேரிஸ் தீவுகள்

   (v) மஞ்சள் கடல்

   (vi) காபென்ரேரி வளைகுடா

   (vii) வெல்ட் புல்வெளி

   (viii) கீவ் நகரம்

   (ix) ஆபிரிக்கக் கண்டத்தில் நகராக்க வீதம் கூடிய நாடு

   (x) பின்லாந்து நாட்டின் தலைநகரம் (1 x 10 = 10 புள்ளிகள்)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

## பகுதி - III

3. (i) தரவு தகவல்கள் என்பதனால் கருதப்படுவது யாது? *(02 புள்ளிகள்)*

   (ii) முதல் நிலைத்தரவு சேகரிக்கும் நுட்ப முறைகளில் ஒன்றான வினாக்கொத்து முறை தொடர்பாக சுருக்கமாக விளக்குக. *(05 புள்ளிகள்)*

   (iii) தரவுகளின் வகைகள் நான்கு தருக. *(04 புள்ளிகள்)*

   (iv) முதல் நிலைத்தரவு, இரண்டாம் நிலைத்தரவுகளுக்கு இடையில் காணப்படும் இரண்டு வேறுபாடுகளைக் குறிப்பிடுக. *(04 புள்ளிகள்)*

4. (i) புவியியல் தகவல் முறைமையின் பிரதான கூறுகள் நான்கு தருக. *(02 புள்ளிகள்)*

   (ii) நவீன படவரைகலையின் பொது இயல்புகள் மூன்றினைச் சுருக்கமாக விளக்குக. *(06 புள்ளிகள்)*

   (iii) புவியியல் தகவல் முறைமையின் பயன்பாடுகள் இரண்டினை விளக்குக. *(04 புள்ளிகள்)*

   (iv) பூகோள இடநிலைப்படுத்தல் $(GPS)$ முறைமையின் மூன்று பிரிவுகளைத் தருக. *(03 புள்ளிகள்)*

5. (i) படம் ஒன்றினை அமைக்கும் போது கவனம் செலுத்த வேண்டிய அடிப்படை அம்சங்கள் இரண்டு தருக. *(02 புள்ளிகள்)*

   (ii) இலங்கையின் $1:50{,}000$ இடவிளக்கப்படத்தில் அமைவிடத்தினை எடுத்துக் காட்டுவதற்குப் பயன்படுகின்ற இரண்டு நுட்ப முறைகளை விளக்குக. *(04 புள்ளிகள்)*

   (iii) இடவிளக்கப் படம் ஒன்றினைப் பகுத்தாராய்கின்ற முறையினைச் சுருக்கமாக விளக்குக. *(04 புள்ளிகள்)*

   (iv) தற்காலத்தில் படங்கள் பயன்படுதத்ப்படுகின்ற இரண்டு துறைகளை விளக்குக. *(05 புள்ளிகள்)*

6. (i) முதல் நிலைத் தரவுகள் சேகரிக்கும் நுட்ப முறைகளில் ஒன்றான நேர்காணல் என்பதனால் கருதப்படுவது யாது? *(02 புள்ளிகள்)*

   (ii) நேர்காணல் நுட்ப முறையில் காணப்படும் நன்மை தீமைகளை மூன்று காரணிகளின் அடிப்படையில் பகுத்தாராய்க. *(06 புள்ளிகள்)*

   (iii) குடி, மாதிரி என்ற பதங்களை விளக்குக. *(04 புள்ளிகள்)*

   (iv) இரண்டாம் நிலைத்தரவு சேகரிக்கும் நுட்ப முறைகள் மூன்றினைக் குறிப்பிடுக. *(03 புள்ளிகள்)*

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு

**நான்காம் தவணைப் பரீட்சை - 2024**

# National Field Work Centre, Thondaimanaru.

**4th Term Examination - 2024**

FWC

| | | | | | |
|---|---|---|---|---|---|
| புவியியல் - II | | Three Hours | 22 | T | II |
| Geography - II | | Gr : 13 (2024) | | | |

**மேலதிகவாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்**

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும், விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள்:**

❖ **ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்த பட்சம் இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து, எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

## பகுதி – I

## பௌதிகப் புவியியல்

1. (i) மண் உருவாக்கச் செயன்முறைக்குப் பங்களிக்கின்ற நான்கு காரணிகளைப் பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

   (ii) மேலே (i) இல் உம்மால் பெயரிடப்பட்டவற்றுள் இரண்டு காரணிகளைத் தெரிவு செய்து அவை எவ்வாறு மண் உருவாக்கச் செயன்முறைக்குப் பங்களிக்கின்றது என்பதை ஆராய்க. *(06 புள்ளிகள்)*

   (iii) மண்ணின் பக்கப் பார்வையினைக் காட்டும் வரைபடம் ஒன்றினை வரைந்து, அதன் இரண்டு படைகளின் பண்புகளை சுருக்கமாக விளக்குக. *(06 புள்ளிகள்)*

   (iv) இலங்கையில் மண்ணின் தரமிழப்பிற்குப் பொறுப்பான மூன்று மானிடக் காரணிகளை ஆராய்க. *(06 புள்ளிகள்)*

2. (i) உலகின் வரண்ட பிரதேசங்களுடன் தொடர்புடைய நான்கு பௌதிக இயல்புகளைப் பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

   (ii) பாலைவனப் பகுதிகளில் இடம்பெறும் நிலவுருவங்களின் உருவாக்கச் செயன்முறைகள் மூன்றினை விளக்குக. *(06 புள்ளிகள்)*

   (iii) பாலைவனப் பகுதிகளில் நீரினால் உருவாக்கப்படும் மூன்று நிலவுருவங்களை விளக்கப் படங்களுடன் விளக்குக. *(06 புள்ளிகள்)*

   (iv) பாலைவனப் பகுதிகளில் காற்றின் அரித்தலினால் உருவாக்கப்படும் மூன்று நிலவுருவங்களை விளக்கப் படங்களின் உதவியுடன் விளக்குக. *(06 புள்ளிகள்)*

3. (i) காலநிலை மாற்றம் என்பதனால் கருதப்படுவது யாது? *(02 புள்ளிகள்)*

   (ii) காலநிலை மாற்றத்திற்கு ஏதுவான இயற்கைக் காரணிகள் மூன்றினை விபரிக்குக. *(06 புள்ளிகள்)*

   (iii) பூகோள காலநிலை மாற்றத்தின் மூன்று விளைவுகளை ஆராய்க. *(06 புள்ளிகள்)*

   (iv) பூகோள காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் தாக்கங்களை இழிவளவாக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட மூன்று நடவடிக்கைகளை விபரிக்குக. *(06 புள்ளிகள்)*

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

4. (i) தரைக்கீழ் நீர் என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ii) நீர்வளத்தினை வினைத்திறனாகப் பயன்படுத்துவதற்கு மேற்கொள்ளக்கூடிய மூன்று நடவடிக்கைகளை விளக்குக. (06 புள்ளிகள்)


(iii) மனித நடவடிக்கைகளின் காரணமாக நீர் மாசடைகின்ற மூன்று வழிமுறைகளைச் சுருக்கமாக ஆராய்க. (06 புள்ளிகள்)


(iv) இலங்கையில் நீர் வளத்தினைப் பேணிப் பாதுகாப்பதற்கு மேற்கொள்ளப்படும் மூன்று முறைகளை விளக்குக. (06 புள்ளிகள்)

## பகுதி II

### மானிடப் புவியியல்

5. இலங்கையின் 2015, 2030 ஆம் ஆண்டுகளுக்குரிய குடித்தொகைக் கூம்பகங்கள் கீழே தரப்பட்டுள்ளன. இவ்வரைபுகளை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.




(i) குடித்தொகைக் கூம்பகம் என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ii) 2015 ஆம் ஆண்டு கூம்பகத்தின் அடிப்படையில் இலங்கையின் குடித்தொகைப் பண்புகள் மூன்றினைச் சுருக்கமாக விபரிக்குக. (06 புள்ளிகள்)

(iii) 2030 ஆம் ஆண்டு எதிர்வு கூறப்படுகின்ற இலங்கையின் குடித்தொகைக் கூம்பகத்தில் காணப்படக்கூடிய மூன்று பண்புகளைச் சுருக்கமாக விபரிக்குக. (06 புள்ளிகள்)

(iv) 2030 ஆம் ஆண்டில் எதிர்வு கூறப்படுகின்ற சனத்தொகைக் கூம்பின் படி இலங்கை எதிர்வு நோக்குகின்ற மூன்று பிரச்சினைகளை விளக்குக. (06 புள்ளிகள்)

6. (i) குடியிருப்பு ஒன்றின் அடிப்படை அம்சங்கள் நான்கினைத் தருக. (02 புள்ளிகள்)

(ii) நகரக் குடியிருப்பின் மூன்று பண்புகளைச் சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

(iii) அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் காணப்படும் நகராக்கம் தொடர்பான மூன்று பிரச்சினைகளை விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) இலங்கையின் நகராக்கத்துடன் இணைந்து காணப்படும் மூன்று போக்குகளை விளக்குக. (06 புள்ளிகள்)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

7. (i) பசுமைப்புரட்சி என்பதனால் கருதப்படுவது யாது? *(02 புள்ளிகள்)*

(ii) பசுமைப் புரட்சியில் பயன்படுத்தப்படுகின்ற மூன்று தொழில்நுட்ப விடயங்களை விபரிக்குக. *(06 புள்ளிகள்)*

(iii) இலங்கையின் விவசாய சந்தைப்படுத்தலில் காணப்படும் மூன்று பண்புகளைச் சுருக்கமாக விளக்குக. *(06 புள்ளிகள்)*

(iv) உலக விவசாயம் தற்பொழுது எதிர்நோக்கும் மூன்று சவால்களை விபரிக்குக. *(06 புள்ளிகள்)*

8. (i) உழைப்புசார் கைத்தொழில், மூலதனம்சார் கைத்தொழில் என்பதனை வேறுபடுத்துக. *(02 புள்ளிகள்)*

(ii) கைத்தொழில் அமைவிடம் தொடர்பான அண்மைக் காலப் போக்குகள் மூன்றினைச் சுருக்கமாக விளக்குக. *(06 புள்ளிகள்)*

(iii) வலு வளங்களில் ஒன்றான நிலக்கரிப் பயன்பாட்டின் மூன்று பண்புகளை விளக்குக. *(06 புள்ளிகள்)*

(iv) எதிர்கால சக்தி நெருக்கடிக்குத் தீர்வாகப் பயன்படக்கூடிய மூன்று சக்தி வளங்கள் தொடர்பாக விளக்குக. *(06 புள்ளிகள்)*

தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு நடாத்தும் நான்காம் தவணைப் பரீட்சை - 2024

தரம் 13 (2024) புவியியல் படம் (2 ஆம் வினாவிற்கு உரியது)

